**திருகோணமலை நகர சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 22 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தலைவரிற்கு 2018 ஒக்டோபர் 11 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுளுக்கேற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

கணக்குகளைத் தயாரிப்பதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புகள் மீதான வட்டி வருவாயாகிய ரூபா 2,297,514 வருமானக் கூற்றில் ரூபா 2,234,125 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 63,389 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 753,333 தொகை மற்றும் நடப்பாண்டினது ரூபா 63,389 தொகை என்பன கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்புச் சபையின் பிரகாரம் பொதுக் களஞ்சியங்களது பொருட்களின் மொத்தப் பெறுமதி ரூபா 11,905,355 ஆகும். இது ரூபா 11,103,093 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டமையால் பொதுக் களஞ்சியப் பொருட்களது பெறுமதி ரூபா 802,262 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கடற்படைக்கும் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கும் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையான ரூபா 10,889,375 2016 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அது கடன் கொடுத்தோராக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டில் அடுப்பு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 2,705,000 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாக அதனை ரூபா 4,057,500 ஆகக் காட்டியமையால் அடுப்பினது விலை ரூபா 1,352,500 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பதவியணியினருக்கான கடன் பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவைகளது மீதி ரூபா 19,593,148 ஆகும். நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 18,862,595 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, பதவியணியினருக்கான கடன் மீதி ரூபா 730,553 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2017 மே முதல் டிசெம்பர் வரை வாடி வீட்டு வருவாயாகப் பெற வேண்டிய ரூபா 735,540 நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஏ) 2017 ஆம் ஆண்டில் நீதிமன்றத் தண்டப் பணமாகப் பெறப்பட வேண்டிய ரூபா 15,391,243 நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஐ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத நிலையக் களஞ்சியத்திலிருந்த மருத்துவக் கையிருப்பினது பெறுமதி ரூபா 321,608 ஆகும். இது நிதிக் கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஒ) கேட்போர்கூடம், எரிபொருள் நிரப்பு நிலையம் என சபையால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் மொத்தக் கிரயம் 16,887,724 ஆகும். இது நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஓ) சந்தைக் கூட்டுத் தொகுதி, சிகிச்சை நிலையம், தீயணைப்பு நிலையம் என்பவற்றின் கட்டிடங்கள் பெறுமதியிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.3 தொங்கற் கணக்கு

தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது தொங்கற் கணக்கின் செலவு மீதியாகிய ரூபா 11,863,654 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றின்மை

மொத்தப் பெறுமதியாகிய ரூபா 17,501,070 உடைய 14 கணக்கீட்டுக் விடயங்கள் அநேக ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவை உள்ளனவா என்பதைச் சரி, பிழை பார்ப்பதற்கான ஆவணச் சான்று இல்லாமையால் அக் கணக்கீட்டு விடயங்களைச் சரி, பிழை பார்க்க முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | நகர சபைகள் அதிகாரச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 177(2) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களின் பொழிப்பு ஒவ்வொரு நிதியாண்டினதும் மார்ச் 01 அல்லது அதற்கு முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட |

வேண்டுமாயினும் அவ்வாறு நடைபெறவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குரிய 38 வாகனங்களின் மாதாந்தச் செயலாற்றல் பொழிப்புகள் பராமரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | 2015, 2017 ஆம் ஆண்டுகளின்போது உத்தியோகத்தர்களுக்கும் தனி நபர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 24,300 முற்பணத்தை தீர்வு செய்வதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | 2016 டிசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீசிலிக்கப்பட்ட 12 மாதங்களின் பின்னர் மீளப் பரீசீலிக்கப்பட வேண்டுமாயினும், சபையின் 38 வாகனங்களுக்கு அவ்வாறான பரீசீலனை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 21,109,142 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும்

கூடிய வருவாய் ரூபா 8,437,984 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 12,671,158 அதிகரிப்பை இது சுட்டிக் காட்டுகின்றது.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், சேகரித்த வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருவாயினது தோற்றுவாய் | 2017 மதிப்பிடப்பட்ட வருவாய் | 2017 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2017 சேகரித்த வருவாய் | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 பட்டியலிடப்பட்ட வருவாய் | 2016 சேகரித்த வருவாய் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' |
| வீதவரி | 43,480 | 35,188 | 24,971 | 16,035 | 39,450 | 43,215 | 25,618 | 22,711 |
| வாடகை | 20,104 | 21,482 | 16,466 | 5,015 | 13,900 | 21,102 | 12,457 | 8,644 |
| வர்த்தக அனுமதிப் பத்திரங்கள் | 4,500 | 4,442 | 4,442 | - | 4,500 | 4,091 | 4,091 | - |
| அபராதமும் தண்டப்பணமும் | 37,263 | 10,939 | 10,939 | - | 36,822 | 23,140 | 23,140 | - |
| ஏனைய வருவாய் | 24,262 | 6,988 | 6,988 | - | 22,821 | 11,619 | 11,619 | - |

### 2.2.2 முத்திரைத் தீர்வை

2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளுக்கான மொத்த முத்திரைத் தீர்வையை இனங்காண்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு அதனை கிழக்கு மாகாண, மாகாணத் திறைசேரியிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 வாடகை

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் குடியிருப்பாளர்களிடமிருந்து கடை வாடகை நிலுவையாக 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 4,118,295 மொத்தத் தொகை பெறப்பட்டிருந்தது. மொத்த அறவீடும் மொத்த நிலுவையிலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒவ்வொரு குடியிருப்பாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட அறவீட்டை இனங்கண்டு அதனைக் குறித்த வாடகையாளரது நிலுவையிலிருந்து கழித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக, குறித்த குடியிருப்பாளர் நிலுவையைச் செலுத்தியிருந்தபோதும் அது திரும்பவும் நிலுவையாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுசன சுகாதாரம், பாவனைச் சேவைகள், நெடுஞ்சாலைகள் என்பவற்றை முறைப்படுத்தி நிர்வகிப்பதன் மூலம் பொது மக்களின் நலனோம்பலையும் வசதிகளையும் நிறைவேற்றுவதற்குப் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

#### (அ) உப விதிகள்

நகர சபைகள் அதிகாரச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம் 40 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 வரை 13 பணிகளுக்கு மாத்திரமே உப விதிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

**(இ) கைவிடப்பட்ட நிர்மாண வேலைகள்**

2017 ஆம் ஆண்டின்போது ரூபா 3,245,038 க்கான 2 நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு நகர சபை திட்டமிட்டிருந்தது. இந்நிர்மாண வேலைகள் சனசமூக நிலையங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2018 செப்டெம்பர் 17 வரை இவ்வேலைகள் ஆரம்பமாகியிராதபோதும், இவற்றை வேறொரு ஒப்பந்தகாரருக்கு மீள வழங்கி மேற்படி சனசமூக நிலையங்களை ஆற்றல் அற்றவையாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை நகர சபை மேற்கொள்ளவில்லை. ஆகவே, குறித்த நேரத்தில் அந்நிர்மாண வேலைகளின் மூலம் பயனைப் பெறுவதற்கு பிரதேச வாசிகளால் இயலவில்லை. விபரம் வருமாறு.

| | நிர்மாண வேலை விபரம் | சனசமூக நிலையத்தின் பெயர் | உடன்படிக்கைத் திகதி | காலப் பகுதி | தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா |
| 1. | திருகோணமலை பஸ்தரிப்பிட 2 ஆம் மாடியினது கூரையைத் திருத்துவதும் பழுதடைந்த கழிவறையைத் திருத்துவதும் | அரசடி | 2017.10.27 | 02 மாதங்கள் | 2,089,460 |
| 2. | கொங்கிரீட்டிலானாலான வடிகாலமைப்பை நிர்மாணித்தல், வரோதயாநகர் | காந்தி | 2017.10.31 | 02 மாதங்கள் | 1,320,858 |
| மொத்தம் | | | | | 3,409,318 |

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் பிரதேசத்திற்குட்பட்ட பொது இடங்கள், அரச நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கு கழிவுப் பொருட்களை பிளாஸ்டிக், பொலித்தீன், கடதாசி, சேதன மற்றும் கண்ணாடி என வெவ்வேறாக வகைப்படுத்தி கழிவுப் பொருட்களை வெவ்வேறாக்குவதற்கு பீஎஸ்டிஜீ மற்றும் யொவுன்புர நிகழச்சித்திட்டம் 2017 இன் கீழ் 664 கழிவுப்பொருள் கூடுகள் ரூபா 3,160,799 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நகரசபை 240 கழிவுப் பொருள் கூடுகளை பொது இடங்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் வழங்கியிருந்தது. கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட தெரிவுச் செவ்வைகளின்போது ஒரே நிறமுடைய, லேபல்கள் அற்ற கூடுகள் மூலம் வெவ்வேறுப்படுத்தப்படாது கழிவுப்பொருட்கள் மத்திய பஸ் நிலையம், வாகனத் தரிப்பிடம், பிரெடரிக்

கோட்டை வீதி மற்றும் நகர சபை வளாகம் ஆகிய இடங்களில் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இத்தேவைகளைக் கருத்திற் கொள்ளாதும் முறையான விநியோகத் திட்டமும் பராமரிப்புமின்றி ரூபா 1,223,400 பெறுமதியான 272 கூடுகள் 2018 செப்டெம்பர் 17 வரை பயன்படுத்தப்படாதவாறுமிருந்தன.

(ii) நகர சபையின் பிரசேதத்திற்குள் அடங்கும் வீடுகளிலிருந்து பிளாஸ்ரிக், பொலித்தீன் கடுதாசிகள், கண்ணாடிப் பொருட்கள், சேதனப் பொருட்கள் என்பவற்றைப் சேகரிப்பதற்கு நகர சபை நிதியிலிருந்து 40,000 கழிவுப்பொருள் பைகள் ரூபா 1,530,800 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2018 செப்டெம்பர் 17 வரை ரூபா 1,071,560 பெறுமதியான 28,000 பைகள் பயன்படுத்தப்படாதிருந்தன. கழிவுப்பொருட்களை வெவ்வேறாக்கும் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படாமையே இதற்கான காரணமாகும்.

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சீமெந்து வேலை, தச்சுத்தொழில் வேலை, கராஜ், அரிசி ஆலை என்பவற்றின் உரிமையாளர்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை நகர சபையிடமிருந்து பெற வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிடப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெறப்படவில்லை.

(ii) நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரசேதத்தில் வருடாந்தம் ஏறக்குறைய 19,350 தொன் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுகின்றன. இவை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான கண்ணியா எனுமிடத்தில் முறையற்றவாறு கைதவிர்ப்புச் செய்யப்படுகின்றன. இதன் விளைவாக, மழைக்காலத்தில் சுற்றாடல் பிரச்சினைகள் உருவாவதுடன் மிருகங்களுக்கு சுகாதார ரீதியான தீமைகளும் ஏற்படுகின்றன.

**(ஊ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள்**

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்திற்கமைய நோக்கங்கள், இலக்குகள், எண்ணக்கரு என்பவற்றை சபை தீர்மானித்திருக்கவில்லை. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான அறிவு குறைவாக இருந்தது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ மனைகளைப் பயன்படுத்திய 34 உத்தியோகத்தர்கள் அநேக ஆண்டுகளாக வாடகையைச் செலுத்தாதிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 452,142 நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், நிலுவையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) தாபன விதிக் கோவையின் xix அத்தியாயத்தினது 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மனைகளை அரசாங்க உத்தியோகத்தர்களே பயன்படுத்தலாம். எவ்வாறாயினும், சபை தனி நபர்களுக்கு 5 மனைகளை வழங்கியிருந்தது.

(இ) தாபன விதிக் கோவையின் xix அத்தியாயத்தினது 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மனைகளில் வசிக்கக் கூடிய அதி கூடிய காலப்பகுதி 5 ஆண்டுகளாகும். எவ்வாறாயினும், 23 உத்தியோகத்தர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு மேலாக மனைகளை சபை வழங்கியிருந்தது.

(ஈ) பத்து ஆண்டுகளுக்கும் அதிகமாக ரூபா 50,000 க்கு மேற்பட்ட ஆதனவரி நிலுவையாக இருந்த தொகை ரூபா 10,913,161 ஆகும். இதனை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையின் 10 வாகனங்களுக்கு வருமான அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை.

(ஊ) நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 164(2) ஆம் பிரிவின் பிரகாரம் நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட ஹோட்டல்களிலிருந்து அவற்றினது மொத்த வருவாயின் அடிப்படையில் பணம் அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016/2017 ஆம் நிதியாண்டில் 3 சுற்றுலா ஹோட்டல்களிலிருந்து அறவீடுகளைச் சபை மேற்கொள்ளாமையால் சபை சம்பாதிக்க முடியாது போன தொகை ஏறக்குறைய ரூபா 300,000 ஆகும்.

(எ) சபையானது 271 வர்த்தகக் கடைகளிலிருந்து 1 முதல் 9 ஆண்டுகளாக அறவிடாதிருந்த வாடகை நிலுவை ரூபா 19,193,327 ஆகும்.

(ஏ) மீனினது மொத்த விற்பனை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தாலேயே நடாத்தப்படுகின்றது. 62 கடைகளில் 48 கடைகளை வழங்கியதன் மூலம் மாதாந்தம் ரூபா 480,000 வருவாயைப் பெறுவதுடன் வாகனத் தரிப்பிடக் கட்டண வருவாயையும் அவர்கள் பெற்றுள்ளனர். நகர சபைக்குச் சொந்தமான இவ்விடத்தின் சுத்திகரிப்பு பணியையும் நகர சபையே மேற்கொண்டபோதும் வருமானம் எதனையும் பெற்றிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபன விதிக் கோவையின் xxiv அத்தியாயத்தின் பிரகாரம், ஓய்வு பெற்ற, இறப்புக்குள்ளான, பதவி விலகிய 33 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக இருந்த ரூபா 958,231 ஐ அறவிடுவதற்குச் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) சபையின் கணக்காளர் பதவி 11 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளபோதும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) சபையின் செயலாளர் பதவி இலங்கை நிர்வாக சேவைத்தரத்தினதாகும். எவ்வாறாயினும், 2017 பெப்ரவரி 28 தொடக்கம் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை இப்பதவிக்கு நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) வெற்றிடமாக உள்ள முகாமைத்துவ உதவியாளர், சுகாதார மேற்பார்வையாளர், மருத்துவ உதவியாளர், பொதுச்சுகாதார உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர், நூலகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சந்தை மேற்பார்வையாளர், மோட்டார் உதவியாளர் பதவிகள் 2018 செப்டெம்பர் 17 ஆந் திகதியாகிய கணக்காய்வுத் தினம் வரை நிரப்பப்படாதிருந்தன.

## 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 374 கடைகளில் 93 கடைகள் 2014 தொடக்கம் பயன்படுத்தப்படாதிருந்தன. 2017 ஆம் ஆண்டில் 22 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாதிருந்தன. எவ்வாறாயினும், அக்கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு சபை இதுவரை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக,சபை வருடாந்தம் இழப்பிற்குள்ளான அண்ணளவான தொகை ரூபா 2,000,000 ஆகும்.

(ஆ) சபையானது இறுதியாக 2010 ஆம் ஆண்டிலேயே சொத்துக்களது வரி மதிப்பீட்டை மேற்கொண்டிருந்தது. அந்த ஆண்டிற்குரிய பெறுமதியிலேயே அது அமைந்திருந்தது. எனினும், தற்போது சில கட்டிடங்கள் அகற்றப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. எவ்வாறாயினும், சொத்துக்களை மீள மதிப்பிடு செய்து சரியான வருடாந்தப் பெறுமதியை நிர்ணயிப்பதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

(இ) நகர சபை தனது பழைய மண்டபத்தை பழுது பார்த்து புதிய கழிவறை ஒன்றை பவர் ஹவுஸ் வீதியில் உள்ள விடுதியில் நிர்மாணித்திருந்தது. இதற்குச் செலவான தொகை ரூபா 433,929 ஆகும். வறிய சிறுவர்கள் கல்வி கற்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் இதில் இருந்தன. எவ்வாறாயினும், 2018 செப்டெம்பர் 17 வரை மண்டபத்திற்கு நீர், மின்சாரம் என்பவற்றை வழங்குவதற்கு சபையால் இயலாதிருந்தது. ஆகவே, வறிய சிறுவர்கள் தமது கல்வியை முறையாகப் பயில முடியாதவர்களாக இருந்தனர்.

## 3.5 சொத்துக்களது முகாமைத்துவம்

### 3.5.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 19 வாகனங்கள் 01 முதல் 09 ஆண்டுகளாக கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கையின்றி அலுவலக வளாகத்தில் இருந்தன.

### 3.5.2 பொருட் கணிப்புச் சபை

2017 ஆம் ஆண்டின் பொருட்டான பொருட் கணிப்புச் சபை 209 பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் 36 பொருட்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கும் சிபார்சு செய்திருந்தது. எவ்வாறாயினும், 2018 செப்டெம்பர் 17 வரை சிபார்சு அமுலாக்கப்படவில்லை.

## 3.6 பொருட் கொள்வனவு

### 3.6.1 பொருட் கொள்வனவுத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/28 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையானது 2017 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

**3.6.2.1 கோணேசர் கோவில் வீதியில் மெக்கெய்சார் திடலில் வேலி ஒன்றை அமைத்தல்**

வாகனங்கள் உட்புகுவதைத் தவிர்ப்பதற்கென கோணேசர் கோவில் வீதியில் மெக்கெய்சார் திடலில் வேலி ஒன்றை அமைப்பதற்கு 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதியன்று ரூபா 1,207,850 பெறுமதியான ஒப்பந்தம் சனசமூக நிலையம் ஒன்றிற்குச் சபையால் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொடுப்பனவுகளுக்கான பட்டியலின் பிரகாரம் 85 GI குழாய் தூண்களுக்கும் 300 m GI குழாய்களுக்குமான வேலை திருப்திகரமாக நிறைவேறியதாகச் சான்றுறுதிப்படுத்தி ரூபா 567,350 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சனசமூக நிலையம் ரூபா 304,430 கூட்டுத் தொகையுடைய 58 GI தூண்களையும் 90 m GI தூண்களையும் மாத்திரமே பொருத்தியிருந்தது. அதனால் 27 GI தூண்களுக்கும் 210 m GI குழாய்களுக்கும் ரூபா 262,920 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உடன்படிக்கைப் பிரகாரம், 2017 நவம்பர் 20 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாண வேலை முடிவடைய வேண்டுமாயினும், 2018 செப்டெம்பர் 17 வரை வேலை முடிவடையாதிருந்தது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே 01 முதல் 71 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வரவு, செலவுத்திட்டமானது ஆக்கபூர்வமான முகாமைத்துவச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமையை இது சுட்டிக் காட்டுகின்றது.

**4.2 தீர்வு செய்யப்படாததும் பதில் வழங்கப்படாததுமான கணக்காய்வு ஐய வினாக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 மார்ச் 13 ஆந் திகதி ரூபா 3,054,810 தொகையைக் குறிக்கும் கணக்காய்வு ஐய வினாவொன்று சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான பதிலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) திருகோணமலை நகர சபையில் ஐந்து பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளனர். அந்த உத்தியோகத்தர்களது எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து அவர்களது கடமைகளை முன்னுரிமைப் பிரகாரம் சபை தயாரித்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக, பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வழிகாட்டலின் பிரகாரம் அவர்களே தமது கடமைகளைத் தீர்மானித்து சுகாதார மருத்துவ உத்தியோகத்தரது அங்கீகாரத்துடன் வேலை நடைபெற்றிருந்தது. அதற்கமைய, நகர சபைக்கும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பு திருப்திகரமாக அமையாதலால் பொது சுகாதார பரிசோதகர்களது வேலைப் பங்களிப்பு உயர் அளவில் அமைந்திருக்கவில்லை.

(இ) கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரமானது ரூபா 4,044,907 கிரயத்தில் 2014 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கழிவு நீரைச் சுத்திகரித்து அதனை வெளியேற்றுவதே அதன் நோக்கமாகும். இயந்திரத்தின் மீது கயிறு பொருத்தப்படும் பிரதான பணி

நடைபெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக, சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் சுற்றாடலில் கலந்தமையால் சுற்றாடல் மாசுபடுவதைத் தடுக்கும் நோக்கம் நிறைவேறவில்லை. செலவழித்த தொகை பயனற்றதாகியது.

(ஈ) சபைக்குரிய காணிகளை தனி நபர்களுக்கு வழங்குவதற்கான அதிகாரம் தலைவருக்கு இல்லாதபோதும் சபையின் 3,212 பேர்ச் காணிகள் 2008 ஆம் ஆண்டில் முன்னாள் தலைவரால் 576 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. 2010 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனை விசாரிப்பதற்கு ஒய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதவான் ஒருவரை முதலமைச்சர் நியமித்திருந்தார் அவரது அறிக்கையின் பிரகாரம் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பன நகர சபையால் கடைப்பிடிக்கப்படுவது தவறியிருந்தமை தெரிய வந்தது. அதன் காரணமாக, 2015 மே 26 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் மீதான மாகாணக் குழுவின் கட்டளையில் குறிப்பிடப்பட்டவாறு முதலமைச்சரின் செயலாளர் தலைமை தாங்கும் குழு ஒன்று தயாரிக்கப்பட்டு இது தொடர்பாக விசாரனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறித்த குழுவானது இது தொடர்பாக 2018 யூன் 29 வரை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருக்காமையால் தலைவருக்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மேலும் தாமதம் ஏற்பட்டது.

(உ) திண்மக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் இடத்தில் யானைகள் உட்புகாதவாறு 2014 ஆம் அண்டில் சபையால் மின்சார வேலி ஒன்று ரூபா 618,858 கிரயத்தில் அமைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மின்சாரம் வழங்கப்பட்டமையால் யானைகள் மின்சார வேலியை அழித்திருந்தன. தற்போது காணியைச் சுற்றிவர மின்சார வேலி இல்லாததும் யானைகள் திண்மக் கழிவுப் பொருட்களை உண்பதற்கு வருவதும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2015 ஆம் ஆண்டின் நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட வீரநகரில் உள்ள மருத்துவ மனைகளிலிருந்து அகற்றப்படும் பாதகமான கழிவுப் பொருட்களை எரிப்பதற்கான கருவி ஒன்று நிறுவப்படுவது ஆரம்பமாகியது. 2017 ஆம் ஆண்டில் நிறைவடைந்த இவ் வேலைக்கு ரூபா 4,230,155 செலவாகியிருந்தது. எவ்வாறாயினும், தற்சமயம் இக் கருவி மின்சாரம் பெறப்படாது பயன்படுத்தப்படாது உள்ளதால் கண்ணியாவில் திறந்த காணி ஒன்றில் பாதகமான கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டவாறுள்ளன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | அம்சம் | அவதானிப்பு |
|---|---|---|
| i. | கணக்கீடு | பேரேடு முறையாகப் பேணப்படாமையும் நடைமுறை அல்லாத சொத்துக்களும் வருவாயும் பதிவு செய்யப்படாமையும். |
| ii. | வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு | வருவாய் மற்றும் செலவினத்தை முன் கூட்டியே கணிப்பிடாது வரவு, செலவுத்திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல். |
| iii. | வருவாய் நிர்வாகம் | வருவாய் நிலுவையை அறவிடுவதில் நீண்ட தாமதம். |

| | | |
|---|---|---|
| iv. | மனித வள முகாமைத்துவம் | முக்கிய பதவிகளை நிரப்புவதில் நீண்ட தாமதம் |
| v. | ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்த வேலைகளைக் கைவிட்ட ஒப்பந்தகாரர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளாமை |